## தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்திற்கு

## ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவிலேயே

# மாற்று நிலம்

### டத்தோஸ்ரீ சரவணன் அறிவிப்பு







**கோலாலம்பூர், மார்ச் 26-**

**ஜாலான் மஸ்ஜிட் இந்தியா, கோலாலம்பூரில் அமைந்துள்ள தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் தற்போது அமைந்துள்ள இடத்தில் இருந்து சுமார் 50 மீட்டர் தொலைவில் 4,000 சதுர அடி பரப்பளவில் ஒரு புதிய இடத்தில் நிர்மாணிக்கப்படும் என்று மஇகா தேசியத் துணைத் தலைவர் டத்தோஸ்ரீ எம். சரவணன் நேற்று அறிவித்தார்.**

**ஜாலான் முன்ஷி அப்துல்லாவில் அமைந்திருக்கும் அந்தப் புதிய இடம் இந்த ஆலயத்திற்கான நிரந்தர இடமாகவும் அமையும் என்றும் அவர் சொன்னார்.**

பக்கம் 13

முதல் பக்கத் தொடர்ச்சி

**தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன்..**

ஆலயத்தின் பெயரிலேயே அந்த நிலம் பதிவு செய்யப்படும். ஆலயத் தரப்பினரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஏனெனில் இப்போதுள்ள ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதியிலேயே ஆலயத்திற்கான மாற்று இடம் அமைந்திருக்கிறது என்று அவர் சொன்னார்.

புதிய ஆலயத்தின் திருப்பணி முடியும் வரையில் தற்போதைய ஆலயம் வழக்கம்போல் செயல்படலாம் என்று அவர் மேலும் சொன்னார். முன்னதாக கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டத்தோ டாக்டர் ஸலிஹா முஸ்தாபா, கோலாலம்பூர் டத்தோ பண்டார் மைமுனா முகமட் ஷரிப் ஆகியோருடன் சரவணனும் மேலும் சிலரும் சந்திப்புக் கூட்டத்தை நடத்தினார்கள்.

இதில் பத்து நாடாளுமன்ற உறுப்பினர் பி. பிரபாகரன், சுங்கை பூலோ நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ ஆர். ரமணன், ஆலய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்துடன் காணப்பட்ட இந்தத் தீர்வை இந்துக்கள் நல்ல முறையில் வரவேற்கின்றனர் எனவும் ஆலய நிர்வாகத் தரப்பும் இதனை வரவேற்கிறது எனவும் சரவணன் குறிப்பிட்டார்.

இதற்கிடையே, ஜாலான் மஸ்ஜிட் இந்தியா கோலாலம்பூரில் அமைந்திருக்கும் இந்து ஆலயம், பள்ளிவாசல் நிர்மாணிப்புக்காக அங்கிருந்து 50 மீட்டர் தொலைவில் இடமாற்றம் செய்யப்படும் என்று பிரதமர்துறை கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டத்தோ டாக்டர் ஸலிஹா முஸ்தாபா நேற்றுக் கூறினார்.

இந்தக் கோவிலின் பரப்பளவுக்கு ஏற்ப 4,000 சதுர அடியில் ஒரு புதிய இடத்திற்கு ஆலயத்தை மாற்ற தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய நிர்வாகம் ஒப்புதல் அளித்திருக்கிறது என்று அமைச்சர் கூறனார்.

லோட் பிடி 95, செக்ஷன் 40, முக்கிம் பண்டார் கோலாலம்பூர் எனுமிடத்தில் இந்தப் புதிய நிலம் அமைந்துள்ளது எனவும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு புதிய இடத்தில் ஆலயம் எழுப்பப்படும் எனவும் அவர் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தில் நேற்று நடைபெற்ற நிருபர்கள் கூட்டத்தில் கூறினார்.

அதிகாரப்பூர்வான முறையில் இடமாற்றம் செய்யப்படும் வரையில் ஆலயம் தொடர்ந்து செயல்படும் என்று அவர் சொன்னார்.